செய்யூரில் புதிய கலை கல்லூரி

| முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்

■ மதுராந்தகம்

செய்யூரில் புதிதாக தொடங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை, சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி காட்சி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்துவைத்ததை அடுத்து, செங்கை ஆட்சியர் ச.அருண்ராஜ் தலைமையிலான அதிகாரிகள், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர்.

தமிழக பட்ஜெட் கூட்டத்தொடரில், உயர் கல்வித்துறை மானியக் கோரிக்கையின்போது, செங்கல்பட்டு மாவட்டம், செய்யூரில் புதிதாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

இதன்பேரில், செய்யூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்காலிகமாக புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்படும் எனவும், நடப்பு கல்வியாண்டியில் 270 இடங்கள் ஒதுக்கப்படுவதாகவும், இதன்பேரில், மாணவ, மாணவியர் சேர்க்கை நடைபெற உள்ள தாகவும் மாவட்ட நிர்வாகம் தெரிவித்தது.

இந்நிலையில், புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொலி காட்சி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்துவைத்தார். இதை தொடர்ந்து, செய்யூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தொடக்க விழா நிகழ்ச்சி ஆட்சியர் ச.அருண்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதில், காஞ்சிபுரம் எம்.பி. செல்வம், எம்எல்ஏக்கள் க.சுந்தர், மு.பாபு, மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் ரம்யா, மண்டல கல்லூரி கல்வி இயக்குநர் மலர், செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் செம்பருத்தி, ஒன்றியக் குழுத் தலைவர்கள் சாந்தி, ஏழுமலை, செய்யூர் வட்டாட்சியர் சரவணன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், பேராசிரியர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். மேலும், நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

● தாம்பரம் தேசிய சித்த மருத்துவமனையில். ஆயுஷ் மற்றும் மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் ஆய்வு செய்தார். அப்போது அங்கு நோயாளிகளிடம் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார். படம்: எம்.முத்துகணேஷ்

வெண்காட்டீஸ்வரர் கோயிலில் மே 31-ல் கொடியேற்றம்

■ மதுராந்தகம்

மதுராந்தகத்தை அடுத்த கடப்பேரி கிராமத்தில் அமைந்துள்ள வெண்காட்டீஸ்வரர் கோயிலில் வைகாசி பிரம்மோற்சவம், மே 31-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்க உள்ளதாக கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகத்தை அடுத்த கடப்பேரி கிராமத்தில் பழமையான மீனாட்சி அம்பாள் உடனுறை வெண்காட்டீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில், கடந்த சில மாதங்களுக்கு முன்பு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்நிலையில், இந்த் ஆண்டுக்கான வைகாசி பிரம்மோற்சவம் மே 31-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்க உள்ளது. இதையடுத்து, ஜுன் 4-ம் தேதி இரவு திருக்கல்யாணம் மற்றும் பஞ்சமூர்த்தி புறப்பாடு, 6-ம் தேதி திருத்தேர் உற்சவம், 9-ம் தேதி தீர்த்தவாரி உற்சவங்கள் நடைபெற உள்ளன.

விழாவுக்கான சிறப்பு, மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள் உள்ளிட்ட ஏற்பாடுகளை கோயில் செயல் அலுவலர் மேகவண்ணன் தலைமையிலான பணியாளர்கள் மற்றும் கடப்பேரி கிராம மக்கள் மேற்கொண்டுள்ளனர்.

தேசிய சித்த மருத்துவமனையில்

யோகா பயிற்சி தொலை தொடர்பு மையம்

இணை அமைச்சர் தொடங்கிவைத்தார்

■ தாம்பரம்

தேசிய சித்த மருத்துவமனையில் மத்திய அரசின் ஆயுஷ் துறை இணை அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் ஆய்வு செய்தார்.

தாம்பரம் சானடோரியத்தில் உள்ள தேசிய சித்த மருத்துவமனையில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் மத்திய அரசின் ஆயுஷ் துறை இணை அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் கலந்து கொண்டு சித்தர் யோகம் எனும் யோகா பயிற்சி வகுப்பையும், பாரம்பரிய சித்தா ஆய்வகம், சித்தா நாடி பரிசோதனை மையம், 24 மணி நேர சித்த மருத்துவ தொலை தொடர்பு தகவல் மையம் ஆகியவற்றை தொடங்கி வைத்தார்.

பின்னர் மகிழம், இலுப்பை போன்ற மருத்துவ மரக்கன்றுகளை நட்டதோடு நோயாளிகளை பார்வையிட்டு சிகிச்சை குறித்து கேட்டறிந்தார். முன்னதாக சித்தர் திருமூலர் கோயிலில் பிரார்த்தனை செய்தார். தேசிய சித்த நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் ஜி. செந்தில்வேல் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

சூர்யநகரம் கிளை (DPC: 16268)
சர்வே எண்.206/6A, பொத்தூர்பேட்டை மெயின் ரோடு, தெக்கூனூர் கிராமம், திருவள்ளூர் - 631 209.
Mob: 94454 59818 Email:cb16268@canarabank.com
Canara Bank கனரா வங்கி
Syndicate சிண்டிகேட்

அச்சுயா சொத்து கவாதின அறிவிப்பு ANNEXURE – 10 [SECTION 13(4)]

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம். 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள். 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) (Act 54 of 2002) (hereinafter referred to as "the Act") மற்றும் விதி 3ன்படி (Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் கனரா வங்கியின், அதிகாரம்பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவராக கீழே கையொப்பமிட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(12)-ன் கீழ் கடன்தாரர்: Smt.கதா E, W/o.ரமுமல G J, & ஏழுமலை G J, S/o.ஜெனன்நாதன் (இனி "கடன்தாரர்" என அழைக்கப்படுவர்) ஆகியோருக்கு 12.02.2025 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கடன் தொகையான 30.06.2024 அன்றுள்ளபடி ₹ 2,78,760.68 (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்து எட்டாயிரத்து அறுபது மற்றும் பைசா அறுபத்து எட்டு மட்டும்)-ஐ அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தத்தவறியதால், குறிப்பாக கடன்தாரருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பது என்னவெற்றால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதி 8&9-ன்படி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 26.05.2025 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் சார்பாக உடைமையாக்கியுள்ளார்.

இது முதற்கொண்டு கடன்தாரரே/ஜாமீன்தாரர்களோ மற்றும் பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான விவகாரங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது கனரா வங்கி, ஆர்யநகரம் கிளைக்கு வர வேண்டிய கடன் தொகையான 30.06.2024 அன்றுள்ளபடி ₹ 2,78,760.68 (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்து எட்டாயிரத்து எழுநூற்றறு அறுபது மற்றும் பைசா அறுபத்து எட்டு மட்டும்) மற்றும் வட்டிக்கு, கட்டுப்படுட்டவை என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடனுக்கு ஈடாக ஆபமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ருடுபெற்ற சொத்து)

அச்சுயா சொத்து விவரம்

சொத்து (Mrs.E.கதா-க்கு சொந்தமானது)
கிராம நத்தம் பழைய சர்வே எண்.125/3, புதிய சர்வே எண்.125/13, எண்.12, கிருஷ்ணாசமுத்திரம் "B" கிராம கணக்குகள், புச்சிநெட்டிப்பள்ளி, தோப்பு தெரு, திருத்தணி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் - 631206 எனினும் முகவரியில் கிழக்கு மேற்காக இருபக்கமும் 15 அடி மற்றும் வடக்கு தெற்காக இருபக்கமும் 43 அடி ஆகமொத்தம் 645 சதுர அடி காலி வீட்டு மனை, அதில் கட்டப்பட்டுள்ள கட்டடம், அதனுடன் இணைந்த தனிமுக்கும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: முனியப்பன் ஓட்டு வீடு, மேற்கு: பெருமாள் மாட வீடு, வடக்கு: C J ஏழுமலை சிங்க வீட் வீடு, தெற்கு: தெரு.

தேதி : 26.05.2025 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: திருவண்ணா கனரா வங்கி

SHRIRAM Finance ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் ஸ்ரீராம் ஆர்டிசி.லிமிட், லைன்ஸன் கம்பெனி லிமிட் என அழைக்கப்பட்டது)
மயிலாப்பூர் கிளை: பழைய எண்.70, பழைய எண்.27, S-4, 2வது தளம், வடக்கு மாட வீதி மயிலாப்பூர், சென்னை - 600004 (சாலையபவன் மாடியில்)

கோரிக்கை அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள். 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) சட்டம் பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு ஒன்று 1.Mr.மோகன் பாபு, S/o.சம்பத், எண்.45, ராஜா அண்ணாமலையபுரம், காமராஜர் சாலை, பசுமைவழிச்சாலை, சென்னை-600028. 2.Mrs.லதா A, W/o.சம்பத், எண்.107, வேது குறுக்கு தெரு, குமரன் நகர், சீவரம், செங்குன்றம், பேரூந்து நிலையம் அருகில், கத்தூர்சாவடி, தமிழ்நாடு-600096 ஆகியோருக்கு பதிவு அஞ்சல் மூலமாக 10.05.2025 அன்று அனுப்பப்பட்டது.

பொருள்: M/s.ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட், மத்தளவெளி கிளையில் வைத்துள்ள காலக்கடன் (MYLPOO7061700066) தொடர்பாக. NPA தேதி: 17.04.2025

நீங்கள் மேற்படி கடன் கணக்கு தொடர்பாக 03.05.2025 அன்றுள்ளபடி நிலுவைத் தொகை ₹99,55,311/- (ரூபாய் தொண்ணூற்று ஒன்பது லட்சத்து ஐம்பத்து ஐந்நூற்றிற்கு முன்னுள்ற பதினொன்று மட்டும்) மற்றும் 04.05.2025 முதல் அத்தொகை செலுத்தப்படும் வரையான ஒப்புக்கொள்ளப்பட்ட வித்தத்தில் மேல் வட்டியையும் சேர்த்து செலுத்த தவறியிருக்கிறீர். மேற்படி சட்டத்தின் கீழ் கம்பெனியானது 03.05.2025 அன்றுள்ளபடி நிலுவைத் தொகை ₹99,55,311/- செலுத்துமாறு கோரி 10.05.2025 அன்று அறிவிப்பு ஒன்றை உங்களுக்கு அனுப்பியது.

உங்களில் 1வது நபருக்கு பதிவு அஞ்சலில் ஒப்புகைச்சீட்டுடன் அனுப்பப்பட்ட அந்த அறிவிப்புகள் முறையாக பெற்றுக்கொள்ளப்பட்டது (served) மற்றும் 2வது நபருக்கு பதிவு அஞ்சலில் ஒப்புகைச்சீட்டுடன் அனுப்பப்பட்ட அந்த அறிவிப்பு கவுத்தை வாங்க மறுத்துவிட்டார் (refused) என குறிப்பிடப்பட்டு திரும்பி வந்துவிட்டன. எனவே, இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், கடன் நிலுவைத்தொகை 03.05.2025 அன்றுள்ளபடி ₹ 99,55,311/- (ரூபாய் தொண்ணூற்று ஒன்று லட்சத்து ஐம்பத்து ஐந்நூற்றிற்கு முன்னுள்ற பதினொன்று மட்டும்) மற்றும் 04.05.2025 முதல் அத்தொகை செலுத்தப்படும் தேதி வரையான வட்டியையும் சேர்த்துச் செலுத்துமாறு இதன்மூலம் உங்களிடம் கோரப்படுகிறது. தவறினால் கிழகானும் அடமானமாகிய உள்ளன கடனுக்கு உரான அடமான சொத்தாக மாறி கம்பெனி தமக்குள்ள அவசரக்க அதிகாரத்தை உரிமையையும் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும். இந்த அறிவிப்பு கம்பெனிக்கு இருக்கும் இதர எந்தவொரு உரிமைக்கும் பாதகமின்றி வெளியிடப்படுகிறது.

அதாவது தற்போது DRT/RO-DRT/DRAT/நீதிமன்றம் முன்னிலையில் நிலுவையில் உள்ள ஏதேனும் விசாரணைகளுக்கும் மற்றும் / பெறப்படவுள்ள ஆணைகள் / தீர்ப்பு ஆணைகள் போன்றவைகளுக்கு மேற்கொள்வதற்கு இதர எந்தவொரு இருக்கும் உரிமைகளுக்கு பாதகமின்றியும் இந்த அறிவிப்பு அறிவிக்கப்படுகிறது.

அச்சுயா சொத்து விபரம்

சொத்தானது Mrs.லதா, W/o.சம்பத்-க்கு சொந்தமானது (ஆவண எண்.1959/2017) தென்னேரி கிராமம் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.268/2B & சர்வே எண்.268/2C, மனை எண்.3, விநாயகாபுரிநகர் 2வது குறுக்கு தெரு, கொட்டிவாக்கம், தாம்பரம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் எனினும் முகவரியிலுள்ள 326.56 சதுர அடி நிலம் அதனுடன் இணைந்த துணுக்கறும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: 10 அடி சோடு, தெற்கு: காலி நிலம், கிழக்கு: மனை எண்.4, மேற்கு: 6 அடி சோடு மற்றும் மனையின் மேற்கு பகுதி.

தேதி: 10.05.2025, இடம் சென்னை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, M/s.ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்

அனகாபுத்தூர் மக்களுக்கு திருமாவளவன் ஆறுதல்

■ பல்லாவரம்

பல்லாவரத்தை அடுத்த அனகாபுத்தூரில் அடையாறு ஆற்றின் கரையோரம் நீர்ப்படிப்பு பகுதிகளை ஆக்கிரமித்து தாய்மூகாம்பிகை நகர், ஸ்டாலின் நகர், சாந்தி நகர், காயிதே மில்லத் நகர் ஆகிய பகுதிகளில் கட்டப்பட்ட 650 வீடுகளை அகற்றும் பணிகள் கடந்த 9 நாட்களாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நேற்று விசிக தலைவர் திருமாவளவன் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து, அவர்களது குறைகளை கேட்டறிந்தார்.

அப்போது அவர் பேசும் போது, "இடிக்கப்படும் வீடுகளுக்கும், நீர் நிலைக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை. வீடுகள் நீர்நிலையில் இருந்து சுமார் 200 மீட்டர் தள்ளியே உள்ளது. இதனை அதிகாரிகள் கவனிக்க வேண்டும். இந்த வீடுகளால் அடையாறு ஆற்றின் நீர் வழிப்பாதைக்கு எந்த விதமான பாதிப்பும் இல்லை. இது சம்பந்தமாக தலைமைச் செயலாளரை சந்தித்து விளக்க உள்ளேன். அதுவரை மக்கள் பதட்டப்பட வேண்டாம்" என கேட்டுக்கொண்டார்.

பின்னர் சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலர் நா.முருகானந்தம் மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை செயலர் கார்த்திகேயன் ஆகியோரை, திருமாவளவன் நேரில் சந்தித்து, அனகாபுத்தூர் மக்களின் கோரிக்கைகளை பரிசீலிக்குமாறும், முதல்வரின் கவனத்துக்கு எடுத்துச்செல்லுமாறும் கோரிக்கை விடுத்தார். அனகாபுத்தூர் பகுதிகளில் பதட்டமான சூழ்நிலை நிலவி வருவதால் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆர்வம் ஐஏஎஸ் அகாடமியில் ஜுன் 1-ல்

ஐஏஎஸ் தேர்வு வழிகாட்டு முகாம்

■ சென்னை

அண்ணா நகரில் செயல்படும் ஆர்வம் ஐஏஎஸ் அகாடமியில், ஜுன் 1-ம் தேதி ஐஏஎஸ் தேர்வுக்கான வழிகாட்டும் முகாம் நடைபெறவுள்ளது.

இந்திய குடிமைப் பணிகள் தேர்வாணையம் ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஆர்எஸ் போன்ற குடிமைப் பணிகளுக்கான தேர்வை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. முதல் நிலை, முதன்மை மற்றும் நேர்முகத் தேர்வு என 3 கட்டமாக நடைபெறும் இத்தேர்வுகளுக்கான அடிப்படைக் கல்வித் தகுதி, வயது வரம்பு, படிக்க வேண்டிய ஆதார நூல்கள், பாடநூல்களிலிருந்து தேர்வு நோக்கில் குறிப்பேடுகளை உருவாக்கும் முறை, அன்றாட நாளிதழ்களைப் படித்தல் மற்றும் குறிப்பெடுத்தல் போன்ற பல்வேறு வழிமுறைகள் குறித்து வழிகாட்டும் முகாமில் தேர்வர்களுக்கு தெளிவுபடுத்தப்படும்.

மேலும் தேர்வு தொடர்பான சந்தேகங்களுக்கு சமீபத்தில் இந்திய குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வெற்றியாளர்கள் சங்கர் பாண்டியராஜ் மற்றும் தமிழரசி ஆகியோர் கலந்துகொண்டு விளக்கம் தருகிறார்கள். விருப்ப பாடத் தேர்வு, முந்தைய தேர்வு வினாக்களை பயிற்சி செய்தல் போன்றவை குறித்தும் அவர்கள் மாணவர்களிடம் பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.

எனவே விருப்பமும் தகுதியும் உள்ள தேர்வுகள் வழிகாட்டும் முகாமில் கலந்துகொள்ளலாம். இதற்குக் கட்டணம் ஏதுமில்லை. தேர்வர்கள் தங்களின் சுய விவரங்களுடன் அகாடமிக்கு நேரடியாக வந்து கலந்துகொள்ளலாம் அல்லது 7448814441, 9150466341 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். ●

மின் கட்டணம் உயர்வு திட்டத்தை கைவிடுமாறு

தமிழ்நாடு ஓட்டல்கள் சங்கம் கோரிக்கை

■ சென்னை

மின் கட்டணம் உயர்வு திட்டத்தை கைவிடுமாறு முதல்வருக்கு தமிழ்நாடு ஓட்டல்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழகத்தில் மின் நுகர்வுக் கட்டணங்களை உயர்த்துவது குறித்து அரசு ஆலோசித்துவருவதாக கடந்த ஒரு மாதமாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகி வருகின்றன. மின்துறை அமைச்சர் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில், 'குடியிருப்புகளுக்கான மின் கட்டணம் உயர்த்தப்படாது' என்று கூறியுள்ளார். இதனால் தொழில் மற்றும் வணிக ரீதியிலான மின் கட்டணம் உயர்த்தப்பட வாய்ப்பு உள்ளதாக தெரிகிறது. இது வணிக ரீதியிலான மின் நுகர்வோரை கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

2022 முதல் 2024-ம் ஆண்டு வரை கடந்த 3 ஆண்டுகளில் தொழில் மற்றும் வணிக ரீதியிலான மின் நுகர்வுக் கட்டணங்கள் மற்றும் வைப்புத் தொகைகள் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டுள்ளன. தற்சமயம் மீண்டும் கட்டணங்கள் உயர்த்தப்படுவது தொழில் மற்றும் வணிக ரீதியிலான மின் நுகர்வோரை கடுமையான பாதிப்புக்கு உள்ளாக்கும்.

குறிப்பாக சாதாரண உணவகங்கள், தேநீர் கடைகள் போன்றவை கடுமையாக பாதிக்கப்படும். இவை குறைந்த கட்டணத்தில் நடுத்தர, கீழ் நடுத்தர மற்றும் ஏழை எளிய மக்களின் அன்றாட பசி, தாகத்தை தீர்க்கும் அத்தியாவசியச் சேவையில் ஈடுபட்டுள்ளன.

எனவே தொழில் மற்றும் வணிக ரீதியிலான மின் நுகர்வு கட்டணங்களை உயர்த்தும் திட்டம் ஏதேனும் இருப்பின் அதை தவிர்க்குமாறு முதல்வரை வேண்டுகிறோம். தமிழ்நாடு ஓட்டல்கள் சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி:
press.release@hindutamil.co.in

வரி விளம்பரங்கள்
சுய செய்தி
பெயர்மாற்றம்

I Kaviarasu S/o. Chandrasekar R/o. 178 vanniyar lane choolaimedu Chennai - 94 have changed my name to Kaviarasu C S/o. B Chandrasekaran for all purposes.

I chandrasekar S/o. Balakrishnan R/o. 178 vanniyar lane choolaimedu Chennai - 94 have changed my name to B Chandrasekaran S/o. Balakrishnan for all purposes.

I Kalpana w/o. Chandrasekar R/o. 178 vanniyar lane choolaimedu Chennai - 94 have changed my name to Kalpana W/o. B Chandrasekaran for all purposes.

I, N. Natarajan, son of Thiru K. Nallusamy, born on 26th December 1958 (District of Birth: Tiruchirappalli), residing at No. 28/2, PNR Illam, South Mada Street, Nungambakkam, Chennai-600 034, shall henceforth be known as K.N. NATARAAJ

I Faridha Banu W/O, R Mohammed Rafi R/o 9/12, South High Court Colony, Near Nathamuni Theatre,thiru Nagar, Villivakkam, Chennai - 600049 have changed my name to R Faridha Banu.

I, SARUNYA CHANDRASEKHAR, W/O: CHANDRSEKHAR RENGASAMY, R/O: D2C, PLAZA PRISTINE, PHASE2 NOOKAMPALAYAM RD, PERMBAKKAM, KANCHEEPURAM, TN- 600100. have changed my Name to SARUNYA THIRUSANGU.

I, AMIN Khan, S/o G.S Usman Khan, born on 19th May 2008, residing at 6B, VML Avenue, Pattur, Mangadu, Chennai-600122, shall henceforth be known as Amin Khan Usman- Amin Khan

படிவம் எண். INC-26
(நிறுவனங்கள் (இணைத்தல்) விதிகள், 2014-ன் விதி 30-க்கு இணங்க)
மத்திய அரசு, மண்டல இயக்குநர், தெற்கு மண்டலம், சென்னை முன்பாக
நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 13-ன் உட்பிரிவு (4)-ன்கீழ் மற்றும் நிறுவனங்கள் (இணைத்தல்) விதிகள் 2014, விதி 30 துணை-விதி (5) பிரிவு (a)-ன்கீழ் சம்பந்தமாக
மற்றும்
இந்த விஷயத்தில்
கம்ப்யூனிகேஷன்ஸ் அண்ட் சிஸ்டம்ஸ் இன்ஜினியரிங் (கேஸ்) பிரைவேட் லிமிடெட்
(CIN: U29142TN1989PTC016778)
அதன் பதிவு அலுவலகம்
எண். 5, பீச் ஹவுஸ், இரண்டாவது லைன் பீச் சாலை, சென்னை, தமிழ்நாடு, இந்தியா - 600001.
..... மனுதாரர் கம்பெனி/விண்ணப்பதாரர்
நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பிரிவு 13(4)-ன்கீழ் மத்திய அரசிடம் நிறுவனத்தின் அலைப்பு முறையேட்டில் திருத்தம் செய்தமை உறுதிப்படுத்தக் கோரி, 20.05.2025 அன்று நடைபெற்ற கூடுதல் சாதாரண பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானத்தின் அடிப்படையில் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை "தமிழ் நாடு மாநிலத்திலிருந்து" டெல்லி தேசிய தலைநகரப் பகுதிக்கு" மாற்றப்படுவதை விளக்கப்பட்டு செய்ய இந்நிறுவனம் முன்மொழிகிறது என்று இதன் மூலம் பொது மக்களுக்கு அறிவிப்பு வழங்கப்படுகிறது.
நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முன்மொழியப்பட்ட மாற்றத்தினால், பாதிக்கப்படக் கூடிய எந்தவொரு நபரும், முதலீட்டாளர் புகார் படிவத்தை பூர்த்தி செய்து MCA-21 போர்ட்டல் மூலமாக (www.mca.gov.in) அனுப்பலாம் அல்லது வழங்குவதற்கான காரணத்தை பூர்த்தி செய்து அல்லது அவர்/அவரால் விருப்பத்தின் தன்மையைக் கூறும் பிரமாணப் பத்திரத்தின் ஆதரிக்கப்படும் அவர்/அவர் ஆட்சேபனைகள் பதிவு தபால் மூலம் அனுப்பலாம் மற்றும் எதிர்பரிசீல் அடிப்படையுடன் மண்டல இயக்குநர், தெற்கு மண்டலம், கேது தளம், காமதேனு கட்டிடம், 26, ஹாடோஸ் சாலை, சென்னை-600006, தமிழ் நாடு, முகவரியில் அனுகலாம், இந்த அறிவிப்பு விளம்பரம் வெளியிடப்பட்ட பதினான்கு நாட்களுக்குள் (14) அதன் நகலுடன் மனுதாரர் நிறுவனமான கிழுதுகிடப்பட்ட அதன் பதிவு அலுவலக முகவரியில் அனுகவும்:
எண். 5, பீச் ஹவுஸ், இரண்டாவது லைன் பீச் சாலை, சென்னை, தமிழ்நாடு, இந்தியா - 600001.
கம்ப்யூனிகேஷன்ஸ் அண்ட் சிஸ்டம்ஸ் இன்ஜினியரிங் (கேஸ்) பிரைவேட் லிமிடெட்-க்காக மற்றும் சார்பாக
Sd/-
அனில் குமார்
(இயக்குநர்)
DIN : 08424345
நாள் : 26.05.2025 | இடம் : சென்னை

இந்து தமிழ் திசை
பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களில் தரப்படும் பொய்யுறுதி, தவறுதல் உள்ள தகவல்கள் குறித்தவைகளுக்கு மேலதாக அரசு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள் / விளம்பரதாரர் / அரசுகளின் தயாரிப்புகள் / சேவைகள் உபயோகத்தில் ஒப்பந்தங்களுக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்காரமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடட் / கோஸ்ஸன் மீடியா லிமிடட் உத்தரவாதம் தளிக்கின்றன: இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏற்படும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின் மேலொன்றை நிர்வாகங்களின் உரிமையாளர், பதிப்காரர், தச்சர்/ஸ்டோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் அதிலோ எந்தச் குழுவிலும் ஏந்த வகையிலும் தகுதியும் பொறுப்பாவார்பாகள்.
படப்பதிகை தனுப்பபடும் பிறகு ஏற்றுவகைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகுவதைத் திருப்பி அனுப்ப இயலாது.

சேலம் மாநகராட்சி
2025-2026 ஆண்டு 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதியின் (Un-Tied Grant) பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ந.க.எண்.இ4/07857/2025 இரட்டை உறை முறை நாள்: 23.05.2025
1. 2025 – 26 ஆம் ஆண்டு 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதியின் (Un-Tied Grant) கீழ் சேலம் மாநகராட்சியில் 7 சிப்பங்களுக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணைய தளத்தின் வாயிலாக (https://tntenders.gov.in) ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.
2. குறைந்த டாக்சாக ஒரு சிப்பத்தின் மதிப்பு ரூ.42.00 இலட்சம் மற்றும் அதிகப் டாக்சாக ஒரு சிப்பத்தின் மதிப்பு ரூ.94.00 இலட்சம் ஆகும்.
3. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்கள் https://tntenders.gov.in இணைய தள முகவரியில் பார்வையிடலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் https://tntenders.gov.in இணையதள முகவரியில் 27.05.2025 முதல் 10.06.2025 வரை மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒப்பந்ததாரர்கள் முன் வைத்தாவே கட்டப் 03.06.2025 அன்று காலை 11.00 மணியளவில் சேலம் மாநகராட்சி பைப் அலுவலகத்தில் நடைபெறும்.
6. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 12.06.2025 அன்று மாலை 3.00 மணி வரையில்.
7. சேலம் மாநகராட்சி பைப் அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 12.06.2025 அன்று மாலை 3.30 மணி.
8. ஒவ்வொரு பணியின் மதிப்பீட்டு தொகை மற்றும் டேணாதி தொகை, ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட விவரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறியலாம்.
9. இது தொடர்பான கூடுதல் விவரங்கள் ஏதும் தேவைப்படின் மாநகராட்சி பொறியியல் பிரிவில் பெற்று கொள்ளலாம்.
செ.எண்.தொ/2594/ஒப்பந்தப்புள்ளி/2025 ஆணையாளர், சேலம் மாநகராட்சி

தமிழ்நாடு அரசு
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை.
SCPAR - 2025-26
(ஒப்பந்தப்புள்ளி அழைப்பு)
ந.க.எண்.779/2025/டி4
மதுரை மாவட்டம் மதுரை கிழக்கு மற்றும் மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடங்கள் அமைத்தல்
1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. மதுரை மாவட்